தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
DHINATH DHALAM Tamil & English daily Paper
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 099 | செவ்வாய்க்கிழமை Tuesday | 07.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள் குறித்து முதலமைச்சர் விஜய் நேரில் ஆய்வு



பெருகி வரும் மக்கள் தொகையை ஈடுசெய்யும் பொருட்டு நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் ரூ. 914.42 கோடி மதிப்பில் செயல்படுத்த 2009ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது.

**கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்**

இந்நிலையம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 40.05ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் திருவாளர்கள் வி.ஏ.டெக் வாபாக் நிறுவனம் மற்றும் திருவாளர்கள் ஐ.டி.இ. தொழில்நுட்பம்கொண்ட கூட்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 23.02.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு,பணிகள் முடிக்கப்பட்டு, இந்நிலையம் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

இந்த நிலையத்திலிருந்து சுத்திகரிக்க ப்பட்ட குடிநீர் தென் சென்னையில் அமைந்துள்ள வேளச்சேரி, பள்ளிப்பட்டு, திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, சோழிங்கநல்லூர் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளாகத்தைச் சார்ந்துள்ள பகுதிகளுக்கு குழாய் கட்டமைப்புகள் மற்றும் நீரேற்று நிலையங்கள் வாயிலாகவும் மக்களுக்கு வழங்கப்படுதன் மூலம் சுமார் 10 லட்சம் மக்கள் பயனடைகிறார்கள்.

முதல் அலகு 110 மில்லியன் லிட்டர் திறனுடன் 2013ம் ஆண்டில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் , அடுத்த அலகு 150 மில்லியன் லிட்டர் திறனுடன் 2024ம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வந்தது. இதனையடுத்து,நெம்மேலியில் ரூ.4,276.44 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 40 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்படும் வகையில் மூன்றாவது புதிய ஆலை அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

**முதல்-அமைச்சர் ஆய்வு**

இந்த நிலையில்,கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகளை முதல்-அமைச்சர் விஜய் இன்று நேரில் ஆய்வு செய்தார். அப்போது,திட்ட செயல்பாடு, உற்பத்தித் திறன், விரிவாக்கப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் முதல்-அமைச்சர் விஜய் கேட்டறிந்தார். மேலும், குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் முதல்-அமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தினார்.

நெம்மேலியில் 110 - 150 எம்.எல்.டி உற்பத்தி திறன் நிலையங்கள் மூலம் தினமும் 1,230 மில்லியன் லிட்டர் குடிநீர் தரப்படுகிறது. இதன் மூலம் சுமார் 22 லட்சம் மக்கள் பயனடைவர்.

# இலங்கை சிறையில் 2வது நாளாக வன்முறை: ஆயுதக் கிடங்கை சூறையாடிய கைதிகள், அதிகாரிகள் உட்பட 20 பேர் பலி



கொழும்பு: இலங்கையின் மேல் மாகாண கடலோரப் பகுதியான நீர்க்கொழும்பு (Negombo) மத்திய சிறைச்சாலையில், ஏற்பட்ட வன்முறை 2-வது நாளாக இன்று நீடித்து வருகிறது. இதில் சிறை அதிகாரிகள், கைதிகள் என 20பேர் உயிரிழந்துள்ளனர்.சிறைச்சாலைக்குள் சட்ட விரோதமாக போதைப்பொருள் கடத்துவதை ஆதரிக்கும் ஒரு குழுவிற்கும், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மற்றொரு கைதிகள் குழுவிற்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 5) மதியம் திடீரென மோதல் வெடித்தது.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் குறித்து சிறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தவர் என ஒருவரை சக கைதிகள் தாக்கியதே கலவரத்தின் ஆரம்பப்புள்ளி என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு நிலைமை கட்டுக்குள் வந்ததாக அதிகாரிகள் நினைத்திருந்த நிலையில், இன்று காலை மீண்டும் வன்முறை வெடித்தது. சிறை வளாகத்திற்குள் உள்ள அறைகளில் இருந்த இரும்பு ஆயுதங்களுடன் திரண்ட நூற்றுக்கணக்கான கைதிகள், சிறையின் ஆயுதக் கிடங்கை உடைத்து சூறையாடினர்.

அங்கிருந்த தானியங்கி துப்பாக்கிகளை கைப்பற்றிய கைதிகள், வளாகத்திற்குள் சரமாரியாகச் சுடத்தொடங்கினர். நிலைமை கைமீறிச் சென்றதால், சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் விரைந்து வந்த சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் வன்முறையை கட்டுப்படுத்த கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்த வன்முறையில் சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகள் என 20 பேர் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் 4பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கலவரத்தின் ஒரு பகுதியாக, சிறையிலுள்ள பழைய கட்டடங்களின் கூரை மீது ஏறி ஆண் மற்றும் பெண் கைதிகள் தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கைதிகளின் பாரம் தாங்காமல் அதில் ஒரு கட்டடம் இடிந்து விழுந்தது. இதில்,4 பேர் படுகாயமடைந்தனர்.

தற்போது நீர்க்கொழும்பு சிறையைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ராணுவத்தினர் மற்றும் கமாண்டோ படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். ட்ரோன் கேமராக்கள் மூலம் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

1,800 பேர் மட்டுமே அடைக்கப்பட வேண்டிய இந்தச் சிறையில், தற்போது 2,400-க்கும் மேற்பட்ட கைதிகள் வைக்கப்பட்டிருப்பதே வன்முறை இவ்வளவு தீவிரமடையக் காரணம்எனக் கூறப்படுகிறது. நீதித்துறை அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உத்தரவின் பேரில், சிறைச்சாலைகளின் தலைமை ஆணையர் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், அவர்கள் கொழும்பு அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

சிறை வளாகத்தின் வெளியே கைதிகளின் உறவினர்கள் கண்ணீருடன் திரண்டுள்ளதால் அந்தப் பகுதி முழுவதும் பதற்றமாக காணப்படுகிறது.

நீர்க்கொழும்பு பகுதி இலங்கையின் மேல் மாகாணத்தில் உள்ள ஒரு கடலோர நகரமாகும். இந்த மாவட்டத்திலும்,இந்தச் சிறையிலும் அடைக்கப்ப ட்டுள்ள கைதிகளில் பெரும்பாலானோர் சிங்கள இனத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# திமுகவுக்கு வரச்சொல்லி ரூ.50 கோடி பேரம்; ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ பரபரப்பு குற்றச்சாட்டு



தமிழக அரசியல் சூழ்நிலை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு பரபரப்பாக இருக்கிறது.

த.வெ.க. எம்.எல்.ஏ.வை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, அவரது தம்பி அசோக்குமாரை போலீசார் தேடி வருகின்றனர்.

எனவே த.வெ.க. ஆட்சியை கலைக்க குதிரை பேரம் நடத்துவதாக தி.மு.க. மீது த.வெ.க. வெளிப்படையாக குற்றம் சாட்டி வருகிறது.

ஆனால் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க த.வெ.க. அரசு முயற்சி செய்து வருவதாக தி.மு.க.வும் குற்றம் சுமத்தி இருக்கிறது. இது ஒருபுறம் இருக்க இதுவரை அ.தி.மு.க.வில் இருந்து 6 எம்.எல். ஏ.க்கள் ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர். இது அப்பட்டமான குதிரை பேரம் என்று அ.தி.மு.க. குற்றம் சுமத்தி வருகிறது.

இந்த சூழ்நிலையில் தமிழகத்தில் குதிரை பேர அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அமைச்சரவை கூட்டத்தில் 2 தனிநபர்கள் கலந்து கொண்டது குறித்து கவர்னர் விசாரிக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் ஒரே நாளில் எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பா.ஜனதா சார்பில் கவர்னர் ஆர். வி.அர்லேகரிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், அனிதா ராதாகிருஷ்ணன் உதவியாளர்கள் பெயரில் பேரம் பேசியதாக ஸ்ரீவைகுண்டம்தவெக எம்.எல்.ஏ விஜி சரவணன் குற்றம்சாட்டி உள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

**ரூ.50 கோடி பேரம்**

எம்.எல்.ஏ பதவியை ராஜினாமாசெய்து திமுகவில் இணைந்தால் சுமார் ரூ.50 கோடி தருவதாக கூறினர். திமுகவில் வந்தால் அமைச்சர் பதவி தருவதாக பேரம் பேசினர். அனிதா ராதாகிருஷ்ணன் ஆட்கள் என்னிடம் பேரம் பேசினர். பேரத்துக்கு இணங்காவிட்டால் என்ன செய்வோம் என்று தெரியாது என மிரட்டினர். பதவியை ராஜினாமா செய்து திமுகவில் இணையும்படி என்னிடம் அக்கட்சியினர் பேரம் பேசினர். ஸ்ரீவைகுண்டத்தில் எனது வெற்றியால் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் திமுக, அதிமுக, பாஜக இணைந்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்புகின்றனர்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



## வாராந்திர போதைப்பொருள் தடுப்பு ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர போதைப்பொருள் தடுப்பு ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (06.07.2026) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கல்லூரி போதைப்பொருள் தடுப்பு அஒருங்கிணைப்பாளர்களுக்கு மாணவ, மாணவியர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், கல்லூரிகளில் அவ்வப்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். மேலும், கல்லூரி நிர்வாகங்கள் தங்களது பணியாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மூலம் மாணவர்கள் போதைப்பொருட்களைபயன்படுத்தாத வகையில் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். போதைப்பொருள் தடுப்பு அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் ஈரோடு மாவட்டத்தை போதைப்பொருட்கள் இல்லா மாவட்டமாக உருவாக்கி, மாநில அளவில் முன்னோடி மாவட்டமாக திகழச் செய்வதற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, சென்னை, உள், மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை, மிஷன் மேனேஜ்மென்ட் ஸ்பெஷலிஸ்ட் மரியா ஜூஸ்லர் கல்சிங், கல்லூரிகளின் போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் (Anti-Drug Coordinators), உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை வடவள்ளி பகுதியில் பாரத் சிட்டி 007, எனும், பிரீமியம் வில்லா மற்றும் வீட்டு மனைகளின், அறிமுக விழா நிகழ்ச்சி நடைபெற்றது

### திரைப்பட நடிகரும், தயாரிப்பாளருமான சத்யராஜ் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி மனைகளை திறந்து வைத்தார்



கோவை வடவள்ளியில், பாரத் இண்டஸ்ட்ரீஸ் அன்ட் குரூப் ஆஃப் கம்பெனிஸ் நிறுவனத்தின் சார்பாக, பாரத் சிட்டி007 என்ற பிரிமியம் வில்லா, மற்றும் வீட்டுமனைகள் அறிமுக விழா நடைபெற்றது. வடவள்ளி சிறுவாணி சாலை, பொங்காளியூர், பகுதியில் இந்த அறிமுக விழா நிகழ்ச்சியில், இந்திய திரைப்பட நடிகரும், தயாரிப்பாளருமான சத்யராஜ், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றி வைத்தும், வீட்டுமனைகளை அறிமுகம் செய்து வைத்தார். விழாவில், சமூக மற்றும் தொழில்துறை சார்ந்த பல்வேறு முக்கிய பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் கலந்து கொண்டனர், தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய நடிகர் சத்யராஜ், மற்றும் பாரத் இன்டர்ஸ்டிஸ் நிறுவனத்தின் தலைவரும், நிர்வாக இயக்குனருமான லயன் பன்னீர்செல்வம் ஆகியோர் செய்தியாளர்களிடம், கூறியதாவது.. தொலைநோக்குப் பார்வையில் இந்த பாரத் சிட்டி உருவாகியுள்ளது எனவும், எளிய பின்னணியில், இருந்து வந்து, இன்று பல துறைகளில் பறந்து விரிந்த ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கி, தொழிலதிபராக தான் திகழ்ந்து வருவதாகவும், தனது வெற்றிப் பயணம், இளம் தலைமுறைக்கு ஊக்கமாக அமைவதாக தெரிவித்தார். உற்பத்தி துறை, ரியல் எஸ்டேட், மற்றும் முதலீடுகள் என 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டதனதுதொழில்முறையூத்தி, நேர்மை, மற்றும்திறமையானநிதி மேலாண்மை, மாறாத உறுதியையும், தன்னம்பிக்கையையும், மாறா அர்ப்பணிப்பையும் கொண்டதாக தெரிவித்தார். மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள பாரத் சிட்டி, 9.44 ஏக்கர் பரப்பளவில், 189 வில்லா மலைகளைக் கொண்ட ஒரு பிரீமியம் வில்லா, எனவும், இந்ததிட்டத்தில் ஒரு ஏக்கர் பரப்பிலான சென்ட்ரல் பார்க், தியானம் செய்வதற்கான பிரத்தியாகபகுதி, நீரூற்று, நடைபயிற்சி பாதை, கால்பந்து விளையாட்டு பகுதி, வெளிப்புற உடற்பயிற்சி கூடம், பிக்கில் பால் கோர்ட், டெம்பிள் கார்டன், மற்றும்குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, உட்பட 20க்கும் மேற்பட்ட லைஃப் ஸ்டைல் வசதிகள் உள்ளது என்று தெரிவித்தார். மேலும் அரசின் டிடிசிபி, அங்கீகாரம்மற்றும்ரேராபதிவு செய்து, பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது எனவும், முன்னணி வங்கிகள் 70 முதல் 90 வரையிலான வங்கி கடனுதவிகளும் வழங்குவதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் பாரத் இன்டஸ்ட்ரீஸ் அண்ட் குரூப் ஆஃப் கம்பெனிஸ் நிறுவனத்தின் இயக்குனர் அரவிந்த் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 6.7.2026 நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் .ரஞ்ஜீத் சிங், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (06.07.2026) நடைபெற்றது. தார்சாலை, முதியோர் இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஆதார் கார்டு, உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில்கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 385 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரியதுறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் மகேஸ்வரி மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், சமூக நல அலுவலர் பூங்கோதை, அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை மாவட்டம் உப்பிலிபாளையம் அடுத்த ராஜீவ்காந்தி நகரில் அக்யுரேட் க்ளினிகில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்



கோவை மாவட்டம் உப்பிலிபாளயம் அடுத்த ராஜுவ் காந்தி நகரில், அக்யுரேட் கிளினிக் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தின் சார்பாக, 3வது மாபெரும் இலவச மருத்துவ முகாம் க்ளினிக் வளாகத்தில் நடைபெற்றது. காலை 7 மணி முதல் நடைபெற்ற இந்த முகாமில், இரத்த சர்க்கரைபரிசோதனை, 3 மாத சர்க்கரை அளவு, கொழுப்பு அளவு பரிசோதனை, நரம்பு பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, தைராய்டு பரிசோதனை, கல்லீரல் பரிசோதனைகள் இலவசமாக செய்யபட்டு அதற்கான வழிகாட்டுதலும் நடைபெற்றது இந்த முகாமில், அக்யுரேட் கிளினிக் சென்டர் மையத்தின் நிர்வாக இயக்குநரும், சர்க்கரை மற்றும் இருதயநோய் சிறப்பு மருத்துவர். கோவை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் க்ளினிகை சேர்ந்த டாக்டர் ஸ்ரீ ராம் கனேஷ்

மருத்துவ பரிந்துரைகளை வழங்கினார். இந்த முகாமில் இந்தபகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்த முகாமில், ரூபாய் 5000 மதிப்புள்ள இரத்த பரிசோதனைகள் இலவசமாகவும், 7000 மதிப்புள்ளகல்லீரல்கொழுப்பு ஸ்கேன் வெறும் 500க்கு செய்யபட்டது. தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய டாக்டர் ஸ்ரீ ராம் கனேஷ் கூறியதாவது.. நமது அக்யுரேட் கிளினிக் துவங்கபட்டு சுமார் மூன்று மாதங்கள் கடந்த நிலையில், இங்கு வரும் நோயாளிகளின் நிலை, மற்றும் அவர்களின் தேவைகளை அறிந்து அதனை பூர்த்தி செய்யும் வகையில் மாதம் தோறும் முதல் ஞாயிற்று கிழமை நாட்களில், பொதுமக்களுக்கு இலவச பரிசோதனைகள், மற்றும் மருத்துவ பரிந்துரைகள் வழங்கபட்டு வருகின்றது. இந்திய மக்கள் 50 முதல் 60 சதவிகிதம் வரை சர்க்கரை நோய் மற்றும் ரத்த கொதிப்பு நோயால் பாதிக்கப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் கண்ட்ரோல் இல்லாமல் இருப்பதாக மருத்துவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நாளைய இளையசமுதாயம்நல்ல வலிமையான ஆரோக்கியமான தலைமுறையுடன் வாழ வழி செய்வதே தனது லட்சியம் என டாக்டர் தெரிவித்துடன் இந்த முகாமினை நடத்தி வருவதாக கூறினார்.

இன்றைய இளம் தலைமுறையினர் சர்க்கரை நோயால் பாதிக்கப்படுவது வேதனையளிப்பதாகவும், இதற்கு முக்கிய காரணமே உணவு பழக்க வழக்கங்கள், மற்றும் உடல் உழைப்பு இன்மை காரணம் தான், அத்தகைய இளம் தலைமுறைகளை மீட்கும் வகையில் பல்வேறு எளிய பழக்க வழக்கங்களை மாற்றம் செய்ய சொல்லி அவர்களை சர்க்கரை நோயில் இருந்து காக்கவேண்டும் என்ற நோக்கில் இந்த இலவச முகாமினை நடத்தி வருவதாக கூறினார். ஆரம்ப நிலையில் கண்டறிய படும் இத்தகைய நோய்களுக்கு மருத்து மாத்திரைகள் வழங்காமல், அவர்களின் பழக்க வழக்கங்களைமாற்றி, அவர்களை காக்க வேண்டும் என்ற நோக்கிலும், தேவைப்படும் பொதுமக்களுக்கு மட்டுமே மாத்திரைகள், இன்சுலின்களை வழங்குவதாகவும், எனவே பொதுமக்கள், தங்களது உடல் மீது அக்கரை கொள்ளுங்கள் என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாய நிலங்களுக்கு செல்ல வழியின்றி தவிக்கும் விவசாயிகள் - ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதை அமைக்க மாவட்ட நிர்வாகத்திடம் மனு



ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி அருகே உள்ளபரதராமி, மோசூர், கணியனூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை மனு அளித்தனர்.

மனுவில் அவர்கள் கூறியதாவது:

100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பல ஏக்கர் பரப்பளவில் நெல், கரும்பு, வாழை, தென்னை, வேர்க்கடலை உள்ளிட்ட பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். விவசாய நிலங்களுக்கு செல்ல தனிப்பட்ட பாதை இல்லாததால், பல ஆண்டுகளாக பிறரது நிலங்கள் வழியாகவே சென்று விவசாயப் பணிகளை மேற்கொண்டு வந்ததாக தெரிவித்துள்ளனர்.

தற்போது, கர்நாடகாவைச் சேர்ந்த KGF Solar Project Limited என்ற தனியார் நிறுவனம் சுற்றியுள்ள தரிசு நிலங்களை வாங்கி வேலி அமைத்ததால், விவசாய நிலங்களுக்கு செல்லும் வழி முற்றிலும் தடைபட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் விளைபொருட்களை வெளியே கொண்டு வருவதிலும் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், நிறுவனத்தின் தலைவர் பொன்னுசாமி மற்றும் விஜயராணி ஆகியோர், நில புரோக்கர்கள் மூலம் விவசாயிகளை மிரட்டி, "நிலங்களை ஒப்படைத்து வெளியேற வேண்டும்" என அச்சுறுத்துவதாகவும் மனுவில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தங்களது நிலங்களுக்குசெல்லவே அச்சப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, தனியார் நிறுவனம் அமைத்துள்ள வேலி மற்றும் ஆக்கிரமிப்புகளைஅகற்றி, விவசாய நிலங்களுக்கு செல்ல நிரந்தர பாதை ஏற்படுத்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு விளம்பர வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொடியசைத்து நேற்று (06.07.2026) துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, தனி வட்டாட்சியர் (இ.த.ம) பானுமதி உட்பட பலர் உள்ளனர்.



தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் அவர்களின் 156ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு மதுரை மேற்கு வட்டம், விளாச்சேரி கிராமத்தில் உள்ள நினைவு இல்லத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.சோ.கார்த்திகேயன் அவர்கள்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் அடுத்தடுத்து பெண்களிடம் பேருந்தில் வைத்து திருட்டுஅதிரடி ஆய்வு நடத்திய சிங்க பெண் குழுவினர்

## வாழபத்தல் பகீதாவாச்சலேஸ்வரர் கோயில் அருகே உள்ள மாட்டிறைச்சி மற்றும் சிக்கன் கடைகளை அகற்றக்கோரி இந்து முன்னணி மனு



இராணிப்பேட்டை மாவட்டம், வாழபத்தல் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு தர்மசம்வர்த்தினி உடனுறை பகீதாவாச்சலேஸ்வரர் திருக்கோயில் அருகே செயல்பட்டு வரும் மாட்டிறைச்சி மற்றும் சிக்கன் கடைகளை அகற்றக் கோரி, இந்து முன்னணி சார்பில் இன்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்து முன்னணியின் வேலூர்கோட்ட அமைப்பாளர் டி.வி. ராஜேஷ் அளித்துள்ள மனுவில், கோயிலுக்கு மிக அருகில் "V.A.T. Beef" மற்றும் "நவாப் சிக்கன்" உள்ளிட்ட இறைச்சி கடைகள் செயல்பட்டு வருவதாகவும், இதனால் கோயிலுக்கு வழிபாட்டிற்கு வரும் பக்தர்களின் மனம் புண்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்தக் கடைகளில் இருந்து வெளியேறும் இறைச்சிக் கழிவுகளை காக்கைகள், நாய்கள் உள்ளிட்ட பறவைகள் மற்றும் விலங்குகள் கோயில் வளாகத்திற்குள் கொண்டு வந்து வீசுவதால், கோயிலின் புனிதத்தன்மை பாதிக்கப்படுவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, கோயிலின் புனிதத்தன்மையை பாதுகாக்கும் வகையில், கோயிலை ஒட்டியுள்ள மாட்டிறைச்சி மற்றும் சிக்கன் கடைகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திடம் இந்து முன்னணி சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இலத்தூர் பகுதியில் உள்ள மது நாதசுவாமி ஆலயம் பக்தர்கள் தங்கும் மண்டபத்தில் மேல்ப்பகுதியில் மின் வயர்கள் தாழ்வாக செல்வதால் மண்டபத்தை பராமரிக்க முடியாமல் ஆலய நிர்வாகம் பலமுறை மின்வாரியத்திற்கு கோரிக்கை விடுத்தும் மின் வாரியம் நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதால் ஆலய நிர்வாகம் வேதனை. இது போன்று இலத்தூர் குத்துக்கள் வலசை சாலையில் உள்ள நடராஜ பெருமாள் ஆலய உட்பகுதியில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளால் தற்பொழுது தென்மேற்கு பருவமழைக் காலம் என்பதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளதால் அதனையும் மாற்றி தர வேண்டும் கோரிக்கை விடுத்தும் இதுவரை மின்வாரியத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருவதால் பக்தர்கள் வேதனை.

## ராணிப்பேட்டை மாவட்ட நீதிமன்றங்களில் காலியாக உள்ள சட்ட அலுவலர் பணியிடங்கள்: உள்ளூர் அனுபவமிக்க வழக்கறிஞர்களுக்கு முன்னுரிமை வழங்க கோரிக்கை



ராணிப்பேட்டை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் காலியாக உள்ள சட்ட அலுவலர் (Law Officer) பணியிடங்களை நிரப்பும் போது, ராணிப்பேட்டை வழக்கறிஞர்கள் சங்கத்தில் பதிவு செய்து, தொடர்ந்து ராணிப்பேட்டை நீதிமன்ற ங்களில் வழக்காடி வரும் அனுபவமிக்க உள்ளூர் வழக்கறிஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியருக்குகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் அளித்துள்ள மனுவில், ராணிப்பேட்டை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் நடைமுறைகள், உள்ளூர்சட்ட நிர்வாகம் மற்றும் நீதிமன்ற செயல்பாடுகள் குறித்து நேரடி அனுபவம் பெற்ற வழக்கறிஞர்களே சட்ட அலுவலர் பொறுப்பை திறம்பட மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.ம்,போழ்ய நீதிமன்ற அனுபவம் இல்லாதவர்கள் அல்லது ராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் ராணிப்பேட்டை வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு வெளியே இருந்து விண்ணப்பிப்பவர்களை இப்பணியிடங்களுக்கு பரிசீலிக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். நீதி நிர்வாகம் சிறப்பாக செயல்பட, உள்ளூர் நீதிமன்ற நடைமுறைகள் குறித்த ஆழ்ந்த அறிவும், நீண்டகால நீதிமன்ற அனுபவமும் கொண்ட வழக்கறிஞர்களை மட்டுமே சட்ட அலுவலர்களாக நியமிக்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, காலிப்பணியிடங்களுக்கான நியமன செயல்முறையை மாவட்ட நிர்வாகம் மிகுந்த கவனத்துடன் கண்காணித்து, தகுதி, அனுபவம் மற்றும் உள்ளூர் நீதிமன்றப் பணிப்பரிச்சயத்தின் அடிப்படையில் மட்டுமே நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு

## தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் பிரமாண்ட மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடத்தப்பட உள்ளது



தூத்துக்குடி மாநகர மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள்மற்றும்செயல்வீரர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் மாநகர மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.எம். சகாயராஜ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராகஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் சுப்ரமணிய ஆதித்தன் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் பல்வேறு முக்கிய அரசியல் மற்றும் சமூகத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்ற ப்பட்டன: : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக மாணிக்கம் தாகூரை நியமனம் செய்த அகில இந்தியகாங்கிரஸ்கமிட்டிக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. காமராஜர் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடும் வகையிலும், மத்திய அரசின் மாணவர்களுக்கு எதிரான கல்விக்கொள்கைகளை எதிர்த்தும், அதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவும் தூத்துக்குடி மாநகர காங்கிரஸ் சார்பில் மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்று, லஞ்சம் மற்றும் ஊழல் இல்லாத நல்லாட்சியை நடத்தி வரும் தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கும், அவரது தலைமையிலான தமிழக அரசுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த ஜோனத்தான், ரோஷன், கௌசிக்,பிரதீப்,கௌதம், ஹரிஷ், ஆகாஷ் உட்படப் பல இளைஞர்கள் காங்கிரஸ் கட்சியில் தங்களை அதிகாரப்பூர்வமாக இணைத்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில்கிழக்கு மண்டலப் பொறுப்பாளர் ஐசன் சில்வா, தெற்கு மண்டலப் பொறுப்பாளர் நிர்மல் கிறிஸ்டோபர், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் சாமுவேல் ஞானதுரை, ஊடகப் பிரிவு தென்மண்டலப் பொறுப்பாளர் ஜான் சாமுவேல், துணை அமைப்பின் பொறுப்பாளர்கள் பிரபாகரன், பாலகிருஷ்ணன், ஜெயஜோதி, சேவியரம்மாள், சிமியோன், சிவராஜ் மோகன், முத்துவிஜயா, மகிளா காங்கிரஸ் நாடாளுமன்றப் பொறுப்பாளர் உமா மகேஸ்வரி புளோரினா, பொதுச்செயலாளர்கள் மைக்கேல் பிரபாகர், கோபால், ரஞ்சிதம் ஜெபராஜ், நாகேந்திரன், துணைப் பொறுப்பாளர்கள் டேவிட் வசந்தகுமார், ராஜாராம், மடத்தூர் தனபால்ராஜ், மாவட்டச் செயலாளர்கள் இக்னேஷியஸ், மரிய செல்வராஜ், காமாட்சி தனபால் உள்பட பலர் கொண்டனர்.

## உறவினர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் ஒருவர் உயிரிழப்பு; தலைமறைவான உறவினர் கைது



கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்துள்ள கச்சிமைலூர் காட்டுக்கொட்டாய் பகுதியில் உறவினர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் கட்டையால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, தலைமறைவாக இருந்த உறவினரை போலீசார்கைதுசெய்தனர்.

கச்சிமைலூர் காட்டுக்கொட்டாயைச் சேர்ந்த ஜெயராமன் மகன் சரவணன் (40) என்பவருக்கும், அவரது மனைவி மீனாவுக்கும் கடந்த ஜூலை 1–ஆம் தேதி இரவுசுமார்7.30மணியளவில் குடும்பத் தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக,மீனாவின் தங்கை தேவியின் வீட்டிற்குச் சென்ற சரவணன், அவரையும் தாக்கியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து,தேவியின் கணவர் காளியப்பன் மகன் கிருஷ்ணசாமி (33), தனது மனைவியை ஏன் தாக்கினாய் என்று சரவணனிடம் கேட்டபோது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் அது கைகலப்பாக மாறி, இருவரும் கட்டையால் ஒருவரைஒருவர்தாக்கிக் கொண்டதாக போலீசார் தெரிவித்தனர். இதில் சரவணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

காயமடைந்த சரவணன் முதலில் வேப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, பின்னர் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 5) காலை சுமார் 11 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதுகுறித்து சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த தாக்குதல் வழக்கு, சரவணன் உயிரிழந்ததைத் தொடர்ந்து கொலை வழக்காக மாற்றப்பட்டது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தா சுக்லா உத்தரவின் பேரில், திட்டக்குடி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் பார்த்திபன் மேற்பார்வையில், வேப்பூர் காவல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் சிறுப்பாக்கம் காவல் உதவி ஆய்வாளர் பாரதி தலைமையிலான தனிப்படை போலீசார் தலைமறைவாக இருந்த கிருஷ்ணசாமியை தேடி வந்தனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்சுமார்1மணியளவில் வள்ளிமதுரம் பொன்னையா கோயில்அருகேபதுங்கியிருந்த கிருஷ்ணசாமியை கைது செய்து, சிறுப்பாக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட கிருஷ்ணசாமியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப போலீசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். மேலும், சரவணனின் உடல் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.07.2026) குறைகள் கேட்டறிந்தார்.

# 23 ஆண்டுகளுக்குப் பிறகு பெருமுளை முத்தையா சுவாமி-பச்சையம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம்



கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகே உள்ள பெருமுளை கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்தையா சுவாமி மற்றும் பச்சையம்மன் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் 23 ஆண்டுகளுக்குப் பிறகு ஞாயிற்றுக்கிழமை பக்தர்கள் திரளான பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

இதையொட்டி, கடந்த 29-ஆம் தேதி கணபதி ஹோமத்துடன் யாகசாலை பூஜைகள் தொடங்கின.

தொடர்ந்து விக்னேஸ்வர பூஜை, முதல் காலம் முதல் ஆறாம் காலம் வரை யாக பூஜைகள் ஆகம முறையின்படி நடைபெற்றன. இறுதிக்கட்டமாக ஞாயிற்றுக்கிழமை காலை யாகசாலை பூஜைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, புனித கலசங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, காலை 9.50 மணியளவில் ராஜகோபுரம், முத்தையா சுவாமி, பச்சையம்மன் சன்னதிகள் மற்றும் கொடிமரக் கலசங்களுக்கு வேத மந்திரங்கள் முழங்க புனிதநீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மகா தீபாராதனை நடைபெற்றது.

இதில் கடலூர் மாவட்டம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை, பரம்பரை அறங்காவலர்கள் கலைச்செல்வம், செல்வம், வாழப்பாடி கலைமணி ராமமூர்த்தி, பஞ்சவட பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில் தலைவர் கோதண்டராமன், புத்தேரி செல்வ விநாயகர் மற்றும் வரதராஜ பெருமாள் கோவில் தலைவர் தமிழ்மணி, ஆலோசகர் ராதாகிருஷ்ணன், சோழன்குமார் வாண்டையார், உபயதாரர்கள், குலதெய்வ பக்தர்கள் மற்றும் கிராம மக்கள் இணைந்து செய்திருந்தனர்.

## திருப்போரூர் அடுத்த தண்டலம் பகுதியில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் மாவட்ட பேரவை கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் பகுதியில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாவட்ட பேரவை கூட்டம் தலைமை குழு நிர்வாகிகள் சரஸ்வதி, கனகராஜ், மற்றும் சங்கர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அஞ்சலி தீர்மானத்தை அருண்பாஷா வாசித்தார். சங்க நிர்வாகி பிள்ளையார் வரவேற்புரை ஆற்றினார், பழங்குடி மக்கள் சங்க மாநில செயலாளர் பூபாலன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று மாவட்ட பேரவை கூட்டத்தினை துவங்கி வைத்தார் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் க.ஜெகதீசன் நிறைவுறையாற்றி தீர்மானங்களை வாசித்தார்,

கூட்டத்தில் இலவச வீட்டுமனை, பட்டா, பத்து லட்சம் மதிப்பிலான வீடு கட்டுதல், செய்யூர் வட்டத்திற்கு உட்பட்ட ஆட்சிவிளாகம் பகுதியில் பழங்குடியினருக்காக கட்டப்படும் வீடுகள் தரமற்ற நிலையில் உள்ளதால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து தரமான வீடுகள் கட்ட நடவடிக்கை எடுத்தல், திருக்கழுக்குன்றம் வட்டம் ஆனூர் மற்றும் மதுராந்தகம் வட்டம் அருங்குணம் ஆகிய பகுதிகளில் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட பட்டாக்களில் பாதை இல்லாததால் பாதை அமைக்க வேண்டும். செங்காட்டுப் பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்,

அதன்படி மாவட்ட தலைவராக எஸ்.சரஸ்வதி, மாவட்ட செயலாளராக எம்.பார்த்திபன், மாவட்ட பொருளாளராக ஒய் அருண்பாஷா உட்பட 19 பேர் கொண்ட நிர்வாக குழுவும் தேர்வு செய்யப்பட்டனர், இக்கூட்டத்தில் ஏராளமான பழங்குடியின மக்கள் பங்கேற்றனர்,

## கோவையில் நடைபெற்ற சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய அரிசி வகைகள் கண்காட்சியில்

# ஆதித்யாஸ் உணவு நிறுவனம் சார்பில் பொதுமக்களுக்காக கட்டணமில்லா சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது




கோவை நீலம்பூரில் உள்ள தாமரை எக்ஸ்க்ளூசிவ் ஃபுட் ஸ்டோரில், 100-க்கும் மேற்பட்ட சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய அரிசி வகைகள் இடம்பெற்றுள்ள சிறப்பு கண்காட்சி நடைபெற்று வருகிறது.

ஜூலை 5-ம் தேதி வரை நடைபெற்ற இக்கண்காட்சியில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட அரிய சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி வகைகள் மற்றும் இயற்கை உணவுப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதனிடையே, கோவையில் பிரபலமான ஆதித்யாஸ் ஃபுட் ப்ராடக்ட்ஸ் நிறுவனம் சார்பில், இக்கண்காட்சியைப் பார்வையிட வரும் பொதுமக்களுக்கு சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இதில், உணவு மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் கலந்துகொண்டு, பொதுமக்களுக்கு ரத்த அழுத்தம், உடல் எடை, உடல் நிறை குறியீடு என்றழைக்கபடும் பிஎம்ஐ உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்குத் தேவையான ஆரோக்கியமான உணவுகள், அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதுகுறித்து ஆதித்யாஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி சுகன்யா கூறுகையில்,

"மக்களுக்கு சரியான ஊட்டச்சத்து நிறைந்த உணவை வழங்கவேண்டும் என்ற நோக்கத்திலேயே ஆதித்யாஸ் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளோம். இதன் மூலம் தரமான மற்றும் பாரம்பரிய உணவுப் பொருட்களைத் தயாரித்து வருகிறோம். இன்று நடைபெற்ற பாரம்பரிய உணவுப் பொருட்கள் கண்காட்சியில் கலந்து கொண்டு, பொதுமக்களிடம் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளதாகவும். மேலும், ஒவ்வொருவரின் உடல்நிலையையும் நிபுணர்கள் மூலம் பரிசோதனை செய்து, அவரவர் உடல்நிலைக்குத் தேவையான உணவுவகைகள் குறித்து ஆலோசனைகளையும் வழங்கியுள்ளோம்" என்றார்.

## கோவை மாவட்ட செங்கல், லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தம் காரணமாக

# கட்டுமான தொழிலுக்கு தேவையான உதிரிபாகங்களின் விலை இன்னும் உயர வாய்ப்பு உள்ளது!

## கோவை தடாகம் பகுதியில் மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் பரபரப்பு பேட்டி



கோவை மாவட்டம் தடாகம் பகுதியில், கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை துவங்கியுள்ளனர். தொடர்ந்து மூன்று நாட்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் இச்சங்கத்தினர்,

எரிபொருள் விலை உயர்வு, உதிரிபாகங்கள் விலை உயர்வு, ஜிபிஎஸ் கருவி, எப்சி, இன்சூரன்ஸ் விலை உயர்வு, மற்றும் சாலை வரி உயர்வை கண்டித்தும், இனி எங்களது லாரிகளில், அதிக எடை ஏற்ற மாட்டோம், ஜிஎஸ்டி பில் இல்லாமல் வாகனங்களை இயக்க மாட்டோம், பாதுகாப்பான மற்றும் சட்டப்படி லாரி போக்குவரத்தை உறுதி செய்வோம் என்று கோரிக்கை வைத்துள்ளனர், மேலும் இந்த போராட்டத்திற்கு அனைத்து செங்கல் லாரி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆதரவு தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். தொடர்ந்து இது குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய இச்சங்க நிர்வாகிகளான எஸ்பிஎம். தமிழ், பரசுராமன், டிகேஎஸ் தங்கராஜ், மோகன்குமார் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் கூறியதாவது..

கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக, இன்று முதல் வரும், 8ம் தேதி வரை, மூன்று நாட்கள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை துவங்கி உள்ளோம்.

இந்த போராட்டத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட லாரிகள், கோவை மாவட்டத்தில் மட்டும் வேலை நிறுத்தம் செய்துள்ளது.

இதனால் ஒருநாளைக்கு 20 லட்சம் வரை, இழப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும்

இந்த தொழிலை நம்பி, உள்ள சுமார் 3000த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக எங்களது போராட்டம் காரணமாக, கட்டுமான துறைக்கு தேவையான அனைத்து உதிரிபாகங்களும் விலை ஏறும் நிலை ஏற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். மேலும்

இந்த போராட்டம் நடத்த முக்கிய காரணமே, அதிக எடையுடன் செங்கல்கள் ஏற்றி வரும் லாரிகளுக்கு அதிக அளவில் காவல்துறையினர் அபராதம் விதிக்கின்றனர். ஆர் டி ஒ அதிகாரிகள் லாரிகளை சிறை பிடிக்கின்றனர் இதனால் லாரி உரிமையாளர்கள் கடுமையாக பாதிக்க படுகின்றனர். இதனால் அரசு நிர்ணயித்த எடையின் அளவில் லாரிகளை இயக்க உள்ளதாகவும், ஜிஎஸ்டி பில் இல்லாமல் செங்கல்களை விற்பனை செய்யும் நிறுவனங்களில் இருந்து செங்கல்களை வாங்க மாட்டோம் என்று உறுதியுடன் தெரிவித்துள்ளனர். இந்த போராட்டத்தில் ஆர்எஸ்ஆர் செல்வராஜ், எஸ்விகே தமிழரசன், ஆர்பிடி உதயா, சம்பத், தினேஷ், ராஜேஷ், ரமேஷ், எஸ்எம்டி சுரேஷ், வெள்ளைசாமி, எஸ்கேகே ஆனந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருவூர் சூப்பர் கிங்ஸ் பயிற்சி பள்ளி மாணவ, மாணவிகள் 75 பேர் தென் இந்தியா மற்றும் மாநில அளவில் சாதனை

திருவள்ளூர் மாவட்டம் திருவூர் சூப்பர் கிங்ஸ் சிலம்பம் பயிற்சி பள்ளி ஆண்டு விழா திருவூர் சமுதாய கூடத்தில் நடைபெற்றது, தென் இந்திய அளவிலும் மாநில அளவிலும் 30 தங்கம், 23 வெள்ளி, 22 வெண்கலம் என 75 பதக்கங்களை வென்று சாதனை படைத்த மாணவர்களுக்கு பாராட்டு விழா, 1 ஆம் ஆண்டு கச்சை பட்டயம் கட்டும் விழா மிக சிறப்பாக நடைப்பெற்றது முன்னதாக விழாவை ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் முனைவர் .க.சரவணன் தேசிய கொடியையேற்றி தொடங்கிவைத்தார் சூப்பர் கிங்ஸ் பயிற்சி பள்ளியின் கொடியை ஞா.பால்ராஜ் ஏற்றிவைத்து இனிப்புகள் வழங்கினார், வரவேற்புரை திருவூர் சூப்பர் கிங்ஸ் சிலம்பம் பயிற்சி பள்ளி நிறவனர் சுந்தர் என்கிற துரைராஜ் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார், பயிற்சியாளர்கள் ராஜா, ஜெயா ஆகியோர் முன்னிலை வகித்தனர், அனைவரையும் வரவேற்றார் சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கு செவ்வாப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் எஸ்.விஜயகுமார், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் ஆகியோர் நினைவு பரிசு வழங்கினர் மேலும் கச்சை கட்டு பட்டயத்தை த.வெ.க ஒன்றிய செயலாளர் எஸ். விஜயகுமார், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.பழனி, முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் ஆர். திலீப்ராஜ், வழக்கறிஞர்கள் க.எட்வின், ஆர்.அன்பு,, முனுசாமி, சமூக ஆர்வலர்கள் சுபாஷ், தாமோதிரன், சா.அமுதன், சு.ரவி, ரா.உதயகுமார், ஜோதி, ஹரி, விஜய் ஆனந்த், அன்பு, சந்தானம், வெங்கடேசன், செந்தில்குமார், செல்வராஜ், மூர்த்தி, ஜெகநாதன், பிரான்சிஸ், வெற்றி, சாம்சன், குணா, ரவீந்திரன், செந்தில்,, தமிழ்குமார், உள்ளிட்டோர் அனைத்து பயிற்சி மாணவர்களுக்கும் சான்று மற்றும் கட்டு பட்டயத்தை வழங்கி சிறப்பித்தனர் இதில் மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமானோர் கல்ந்துக்கொண்டு சிறப்பித்தனர் முடிவில் துணை பயிற்சியாளர் து.லோகரட்சகி நன்றி கூறினார்



# Injuries in private parts, head trauma, water in lungs: Autopsy of girl raped, killed in Bengal's Baruipur



*The autopsy of a 12-year-old girl, who was allegedly kidnapped, raped and murdered in West Bengal's Baruipur on Saturday, has reportedly revealed injury marks on her private parts, bite marks on her body, severe head injury, and water in her lungs and stomach.*

*The girl's body was recovered from a pond near her home in Baruipur in the South 24 Parganas district on Sunday morning.*

*The 12-year-old's death sparked massive outrage in parts of the Kolkata suburb, resulting in a man being allegedly lynched on suspicion of his involvement in the incident.*

*The girl's family told police that she left home on Saturday afternoon to buy food but never returned, alleging that four people kidnapped her.*

*Police registered a first information report and launched a probe into the incident.*

*Bite marks, scratches, head injury*

*Preliminary findings in the 12-year-old's postmortem examination have revealed injury marks in her private parts, and scratch and bite marks on different areas of her body, news agency PTI reported, citing a senior police officer.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.